E.A.01/2023 in E.P.3/2023

**14.02.2025**

ம.த.சாட்சி 1 அஸ்லாம் - குறுக்குவிசாரணை

நான் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.அந்த மனுவின் உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசம் என்னுடையதுதான் அந்த உத்திரவின் நகல் எ.ம.த.சா.ஆ.1 ஆகும். மனுதாரர் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தாக்கல் செய்த 2(எ) மனுவிலும் அதே விலாசம்தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தொழிலாளர் உதவி ஆணையரிடம் இருந்து எந்தவித அறிவிப்பும் வரவில்லை. அதன்பின் மனுதாரர் தொழிற்தகராறு மனு எண். 228/2010 தாக்கல் செய்தார். அந்த வழக்கில் இருந்தும் எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. அதைதொடர்ந்து மனுதாரர் கணக்கீட்டு மனு எண்.248/2013 என்ற மனுவை தாக்கல் செய்தார் அந்த மனுவில் இருந்தும் எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை.மனுதாரர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று செய்தித்தாள் மூலம் அறிவிப்பு அனுப்பினார் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எனது வழக்கறிஞர்தான் இந்த வழக்கின் விவரங்களை கூறினார்அதன்அடிப்படையில்தான் நான் உயர்நீதிமன்றதில் ரிட் மனு தாக்கல் செய்தேன். நான் என்னுடைய விலாசத்தை குறிப்பிட்டுதான்இடைக்கால மனு எண். 25/2014 மற்றும் 26/2014 என்ற மனுக்களை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தொழிற்தகராறு மற்றும் கணக்கீட்டு மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை இரத்து செய்யக்கோரி மேற்கண்ட இடைக்கால மனுக்களை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இரண்டு இடைக்கால மனுக்களையும் தொழிலாளர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்திரவில் கணக்கீட்டு மனுவின் அடிப்படையில் மனுதாரருக்குசேரவேண்டிய தொகைகளை 6 வாரத்திற்குள் நான் செலுத்த வேண்டுமென்று காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த தொகையை நான் உயர்நீதிமன்ற உத்திரவின்படி அளிக்கவில்லை. அந்த உத்தரவானது 21.02.2023 அன்று பிறப்பிக்க்ப்பட்டது என்றால் சரிதான். நான் அந்த தொகையை செலுத்தாதினால் 8,63,536/- நான் அளிக்க வேண்டும் என்று மனுதாரர் நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்திரவினை எதிர்த்து நான் எந்த உத்திரவும் பெறவில்லை என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்திரவில் என்னுடைய விலாசம் குறித்து நான் கூறியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் அனுப்பப்பட்ட அறிவிப்பு எனக்கு வந்தது. நான் மேல்முறையீடு எதுவும் செய்யாமல் காலம் தாழ்த்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல இந்த மனு நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-இல்லை.**

(Sd)Tmt.S.Uma Maheswari,
Additional Labour Court,Vellore.(FAC)
Vellore.